DECEMBER 2023 **P/ID 35327/PTL4T**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. கிடைக்காமல் போன சில தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

2. இராவண காவியம் பற்றி நீர் அறிவன யாவை?

3. சிலப்பதிகாரம் – பெயர்க் காரணம் கூறுக.

4. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று சிலப்பதிகாரம் அழைக்கப்படுவதேன்?

5. மாதவி எத்தனை ஆண்டுகள் ஆடல் கற்றாள்?

6. குன்றக் குரவை குறித்து நீர் அறிவன யாவை?

7. சீறா என்பது எந்த மொழிச் சொல்?

8. ஓதிமம் என்பது எந்தப் பறவை?

9. பிரிந்த மகவைக் காண் படலம் எத்தனையாவது காண்டத்தில் உள்ளது?

10. பாம்பு தீண்டியது அப்பூதியின் மனைவியையா?

11. ஓதை என்றால் என்ன?

12. பானு – பொருள் கூறுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. கோவலன் கண்ணகியை எங்ஙனம் பாராட்டினான்?

14. காதலன் இல்லாமல் மாதவி தனியே வீடு திரும்பியதேன்?

15. சாலினி, தெய்வம் ஏறிக் கூறியவை யாவை?

16. தேம்பாவணியின் மொழிநடை எத்தகையது?

17. அப்பருக்கு அப்பூதி உணவு படைத்த பாங்கைப் பகர்க.

18. இராமனோடு மகோதரன் போரிட்டவற்றைப் புலப்படுத்துக.

19. அருமருந்தாய் நபி பிறந்ததாகச் சீறாப்புராணம் போற்றுமாற்றை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்ட சூழலைப் படம் பிடிக்க.

21. வஞ்சிக் காண்டப் புறப் பொருள் கூறுகள் யாவை?

22. அப்பருடன் அப்பூதி நிகழ்த்திய உரையாடலை விளக்குக.

23. இராமனின் போராற்றலை உணர்த்துக.

24. காப்பிய இலக்கியக் கொள்கைகளாக எவற்றைச் சுட்டலாம்? விவரிக்க.

———————